# கோலாலம்பூர் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண அரசாங்கம் உறுதி

கோலாலம்பூர், ஜன. 24-
மாநகர் மையப்பகுதியில் காணப்படும் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்டவர்களுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது.

போலீஸும் கோலாலம்பூர் மாநகர மன்றமும் ஒன்றிணைந்து தீர்வு காணும் என்று பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாஃபா கூறினார்.

போக்குவரத்து நெரிசல் ஒரு நீண்டகால பிரச்சினையாக விளங்குவதாகவும் இதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கோலாலம்பூரில் நிலவும் போக்குவரத்து நெரிசலை ஆராய நானே வருகை மேற்கொண்டேன். கோலாலம்பூரில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து போக்குவரத்து அமலாக்க புலன்விசாரணை இலாகா எனக்கு விளக்கமளித்தது என்று அவர் நேற்று துன் எச்.எஸ்.லீ. போக்குவரத்து போலீஸ் நிலையத்திற்கு வருகை புரிந்த பின்னர் தெரிவித்தார்.

போக்குவரத்து நெரிசல் மீதான ஓர் அமைச்சரவை குழுவும் இந்த விவகாரம் தொடர்பான பல பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.



போக்குவரத்து நெரிசலுக்கான காரணங்கள் எங்களுக்கு தெரியும். வேலைக்காகவும் தொழிலுக் காகவும் பயணிக்கும் வாகன மோட்டிகள் சம்பந்தப்பட் டதே இந்த நெரிசல். எனவே போக்குவரத்து நெரிசலை குறைக்க பொது போக்குவரத்தை பயன் படுத்துமாறு கேட்டுக் கொள் கிறேன் என்று அவர் கூறினார். தினசரி சுமார் 13 லட்சம் முதல் 15 லட்சம் வரையிலான வாகனங்கள் மாநகரில் நுழைவதை அவர் சுட்டிக்காட்டினார்.